**தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 232 - சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 26 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 6,892.19 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 6,526.23 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாட்டிலான சேமிப்பு ரூபா 365.96 மில்லியன் அல்லது 5.31 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 4,648.00 | 4,620.30 | 27.70 | 0.60 |
| மூலதனம் | 2,244.19 | 1,905.93 | 338.26 | 15.07 |
| **மொத்தம்** | **6,892.19** | **6,526.23** | **365.96** | **5.31** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23201 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 146.00 | 134.20 | 126.00 | 134.35 | 400.00 | 266.11 |

### 2.2.2 வணிக முற்பணக் கணக்கு

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்

திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்த 23202 விடய இலக்கம் கொண்ட வணிக முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 80.00 | 75.54 | 90.00 | 148.90 | 12.00 | 16.18 | 50.00 | 6.43 |

#### (ஆ) நிதி விளைவு

விடய இலக்கம் 23202 கொண்ட வியாபார முற்பணக் கணக்கின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு பின்வருமாறாகக் காணப்பட்டுள்ளது.

| முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் | நிதி விளைவு | | | |
|---|---|---|---|---|
| | 2015 | | 2014 | |
| | **இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த** | **நட்டம் கருதுகோள் கட்டணத்துடன்** | **இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த** | **இலாபம் கருதுகோள் கட்டணத்துடன்** |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| கைத்தொழில் மற்றும் கமநல முற்பண கணக்கு | 50.80 | (9.51) | 49.92 | 10.35 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 02 கட்டுநிதிக் கணக்குகளின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45.74 மில்லியன் ஆக காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| கட்டுநிதிக் கணக்கு இல | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7002/0000/00/0078/0015/000 | 30.13 |
| 7002/0000/00/0079/0015/000 | 15.61 |
| மொத்தம் | 45.74 |

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 07 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 250.18 மில்லியனாக இருந்தது. 6000/0000/00/0015/0112/000 ஆம் இலக்க வைப்புக்கணக்கில் ரூபா 8.86 மில்லியன் வரவு மீதியொன்று நிலவியது. இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0016/000 | 12.25 |
| 6000/0000/00/0002/0017/000 | 3.33 |
| 6000/0000/00/0006/0028/000 | 4.16 |
| 6000/0000/00/0006/0081/000 | 3.97 |
| 6000/0000/00/0016/0062/000 | 225.90 |
| 6000/0000/00/0018/0075/000 | 0.57 |
| 6000/0000/00/0008/0001/000 | 4.92 |
| | **255.10** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

---------------------------------------------------

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் 11 ஆம் பிரிவு | தலைமை அலுவலகத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645(அ) | மஹர சிறைச்சாலையால் 2011 ஆம் ஆண்டின் பின்னர் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தலைமை அலுவலகத்தால் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 எல்லைகள் பின்பற்றப்படாமை

---------------------------------------------------

திணைக்களத்தால் விடய இலக்கம் 23202 கொண்ட வணிக முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆகக் கூடிய வரவு மீதி எல்லை ரூபா 12.00 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த வரவு மீதி ரூபா 16.18 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தால் அந்த எல்லை ரூபா 4.18 மில்லியனால் மீறப்பட்டிருந்தது.

## 3.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தால் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் தீர்க்கப்பட்டிராத கட்டுநிதிக் கணக்கிற்குரிய மீதி ரூபா 41,107 ஆக இருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

23201 விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகவுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,106,545 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனிப்பட்ட மீதிப் பட்டியலின் பிரகாரம் அம் மீதியினை திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்த போது ரூபா 186,714 ஆன வேறுபாடொன்று நிலவியது.

(இ) வத்துப்பிட்டிவல சிறைச்சாலை மூடப்பட்டதன் பின்னர் அதன் உத்தியோகத்தர்கள் வேறு சிறைச்சாலை நிறுவனங்களுக்கு இடமாற்றப்பட்டிருந்த போதிலும், அதில் காணப்பட்ட ரூபா 168,183 தொகையான கடன் மீதியினை அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு, அந்த கடன் மீதிகளை ஒப்படைத்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடன் பணத்தை அறவிடும் போது ரூபா 123,821 தொகை கூடுதலாக அறவிடப்பட்டிருந்ததுடன், அந்த பணத்தை மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 வணிக முற்பணக் கணக்கு

23202 ஆம் விடய இலக்க சிறைச்சாலைகள் தொழில்நுட்ப மற்றும் கமநல நடவடிக்கைகள் தொடர்பான வணிக முற்பணக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கு தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை வெளியிட முடியாதிருந்ததுடன், முன்னைய ஆண்டு தொடர்பிலும் அவ்வாறே கணக்காய்வு அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்பணக் கணக்குகளில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 63,826,485 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) முற்பணக் கணக்கிற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 12,457,320 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மஹர சிறைச்சாலையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான முடிவுப்பொருட்களின் இருப்புப் பேரேட்டு மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள முடிவுப்பொருள் இருப்பு மீதி ஆகியவற்றிடையே ரூபா 198,289 தொகையான வேறுபாடொன்று நிலவியது.

(உ) வெதுப்பகப் பிரிவு மற்றும் பயிர்ச்செய்கை பிரிவு (விவசாய பண்ணை) ஆகியவற்றில் மூலப்பொருட்களின் கொள்வனவு முறையே ரூபா 8,626,721 மற்றும் ரூபா 358,252 ஆக இருந்தது. அதற்கு எரிபொருள் மற்றும் சக்தியாக ரூபா 655,800 மற்றும் ரூபா 317,538 கூட்டப்பட்டமையால் வெதுப்பகம் பிரிவினதும் பயிர்ச்செய்கைப் பிரிவினதும் மூலப்பொருட்கள் ரூபா 9,282,521 மற்றும் ரூபா 657,790 என கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---------------------------------------------------------------

### 3.6.1 சொத்துக்களின் முகாமைத்துவம்

---------------------------------------------------

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் நிலவியமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் வீரவில சிறைச்சாலைக்கு கிடைக்கப்பெற்றிருந்த 02 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 02 லொரிகள் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) தனியார் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 174,000 பெறுமதியான 12 டிஜிட்டல் கெமராக்கள் சிறைக் கைதிகளின் புகைப்படங்களை எடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டிராததுடன், மற்றுமொரு தனியார் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 147,406 பெறுமதியான 14 மைக்ரோ வேவ் அவன்களும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------

வீரவில தெற்கு கரையில் 11 சிறு கிராமங்களில் சிறைச்சாலை விற்பனைக்கூடம் அமைந்துள்ள 10 பேர்ச் அளவிலான காணியை சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 226,904,589 ஆக இருந்தது. அந்த பொறுப்புக்களில் 1 முதல் 5 வருடங்களுக்கு குறைவான கால வீச்சில் முன் கொண்டுவரப்படுகின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,452,025 ஆக இருந்தது.

(ii) 16 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் பயன்பாட்டின் பின்னரான சேமிப்பு ரூபா 9.15 மில்லியனாக இருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக அந்த சேமிப்பு ரூபா 135.16 மில்லியனை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | **ரூபா** | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 447(4)(5) | 226,904,589 | ஒதுக்கீடுகள் அனுமதிக்கப்பட்ட செலவினப் பேரேட்டில் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) நிதிப்பிரமாணம் 757(இ) | - | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த பற்றாக்குறைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | 13,015,000 | 2012 நவம்பர் 09 ஆந் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின் போது ஏற்பட்ட நட்டத்தினை நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் அறிக்கையிடாமை, 104(1)(அ) பிரகாரம் விசாரணைகளை ஆரம்பிக்காமை, 104(3)(4) இன் பிரகாரம் ஆரம்ப நிலை |

| | | | |
|---|---|---|---|
| | | | அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 102 மற்றும் 104 | | 5,902,059 | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் 77 விபத்துக்களுக்குரிய ரூபா 4,368,716 கூட்டுத்தொகையான நட்டத்தில் ரூபா 1,533,343 தொகை 5 முதல் 10 வருடங்களுக்கிடைப்பட்ட காலவீச்சில் முன்கொண்டுவரப்படும் 20 வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நட்டங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) சிறைச்சாலை நிரந்தரக் கட்டளைகள்** | | | |
| (i) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2013/ 13 ஆம் இலக்க சுற்றறிக்கை | | - | சிறைக்கைதிகள் விடுதலைப்பெற்று செல்லும் போது சிறைச்சாலை படிகள் உள்ளடங்கிய வங்கி வைப்புப் புத்தகங்கள் அவர்களுக்கு கையளிக்கப்பட வேண்டுமெனினும், 20 சிறைக்கைதிகள் விடுதலை பெற்றுச் சென்ற சந்திரப்பத்தில் வீரவில சிறைச்சாலையால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) சிறைச்சாலைகள் நிரந்தரக் கட்டளைகள் 514, 518, 519 மற்றும் 522 | | - | ஒரே வகையான மரக்கறி வகையொன்று ஒரு வாரத்தினுள் 03 நாட்களுக்கு மேல் வழங்கப்பட கூடாது என்பதும் புதிய மீன்களை வழங்கும் போது வாரமொன்றிற்கு இரு தினங்களேனும் இரு வகையான கருவாடு வழங்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.8 உள்நாட்டு நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்கல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

### (அ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட செலவினம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செலவினம் | ஆரம்பிக்காமைக்கான காரணங்கள் சுருக்கமாக |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | ரூபா | |
| மாத்தறை கொட்டவிலவத்த சிறைக்கைதிகளுக்கான பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல் | 32,000,000 | 2014.11.11 | 15,958,902 | 2015 ஆம் ஆண்டிற்கான தேசத்திற்கு மகுடம் கண்காட்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை இலக்கிட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடாத்தப்படுதல் இடைநிறுத்தப் பட்டமையின் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுதலினான தாமதங்கள்**

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | | ரூபா | |
| பல்லேகெல சிறைச்சாலையினை நிர்மாணித்தல் | 1,927,040,000 | 2007.08.15 | 2011.12.31 | பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | 1,266,088,000 | மீளாய்வாண்டினுள் ரூபா 307,363,208 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்ட மைக்கான காரணம் நிர்மாணம் முறையான திட்டமிடப்பட்ட நடைமுறை ஒன்று இல்லாமல் மேற்கொள்ளப்பட்டமை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. |

**3.9 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

கைதிகளை சிறைச்சாலையிலிருந்து விடுதலைப்பெற்று சென்ற பின்னர் சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்துவதற்கான பின்புலமொன்றை உருவாக்கும் நோக்கில் சிறைக்கைதிகளின் புனர்வாழ்விற்கான தொழில்சார், கல்வி மற்றும் சமயம்சார், கல்வி மற்றும் நலன்புரி, வெகுதிகளை வழங்குதல், விளையாட்டு மற்றும் ஏனைய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 2,534,807 மற்றும் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியங்களிலிருந்து ரூபா 1,907,884 செலவிடப்பட்டிருந்ததெனினும், புனர்வாழ்விற்கு உரிய சில பணிகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(i) ஒரு சிறைக்கைதிக்காக ஒதுக்கப்பட வேண்டிய இட அளவு 24 கன அடிகளாக இருக்க வேண்டும். 13 சிறைச்சாலை நிறுவனங்களில் சிறைக்கைதிகளின் வாட்டுக்களில் அனுமதிக்கக்கூடிய சிறைக்கைதிகள்/ சந்தேக நபர்களின் எண்ணிக்கையின் சராசரி 479 ஆக இருக்க வேண்டியதுடன், 05 பரிசோதனை சந்தர்ப்பங்களில் தங்கியிருந்தோர் எண்ணிக்கை அதனிலும் இரு மடங்கினை விஞ்சியிருந்தது. சிறை வாட்டுகளில் காணப்படும் இடநெருக்கடி காரணமாக இரவு நேரங்களில் தங்கியிருப்பதில் சிரமங்கள், புனர்வாழ்வு பணிகள் முறைப்படி இடம்பெறாமை, முதல் முறையாக சிறைக்கு வருவோர் மற்றும் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுபவர்கள் ஒன்றாக இருப்பதால் புனர்வாழ்வு நடவடிக்கைகளின் ஆக்கபூர்வமான தன்மை குறைவடைதல், இளைய சிறைக்கைதிகளை ஏனைய சிறைக்கைதிகளுடன் ஒன்றாக தங்க வைப்பதால் ஏனைய சமூக பிரச்சினைகள் ஏற்படல் போன்ற விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2007 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பல்லேகெல மற்றும் தங்கல்ல சிறைச்சாலைகளின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பணிச் சலுகை அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்ட வேலைக்குழுக்களின் சிறைக்கைதிகளுக்கான சிறைக் கூலிகள் உரிய முறையில் கணக்கிடப்பட்டு வங்கியிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளினுள் ரூபா 374,000,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிலையான கொள்கை ரீதியான வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தாமையின் அடிப்படையில் மேல் மாகாணத்தினுள் சிறைச்சாலைகளை மாற்றும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்லேகெல சிறைச்சாலைகள் கட்டிடத் தொகுதியை நிர்மணிப்பதற்காக மீளாய்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 360,000,000 தொகையான நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 170,000,000 அல்லது 47 சதவீதம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. இதன் காரணத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியினை இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை.

## 3.10 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 712,809 பெறுமதியான 172 காசோலைகள் 06 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை கொண்டனவாகும். தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

(அ) கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையின் பிரதான களஞ்சியத்தில் தெரிவு செய்யப்பட்ட 16 உணவுப்பொருள் விடயங்கள் தொடர்பில் 2015 செப்தம்பர் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது இருப்புக்கள் புத்தகத்தின் மீதி மற்றும் பௌதீக மீதி ஆகியவற்றுக்கிடையே 3 விடயங்களில் 17.1 கிலோ கிராம் பற்றாக்குறையும், 11 விடயங்களில் 96.3 கிலோகிராம் மிகையும் நிலவியது.

(ஆ) 2015 ஆகஸ்ட் 27 ஆந் திகதி மஹர சிறைச்சாலையின் களஞ்சியம் பௌதீக ரீதியில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது 08 உணவுப்பொருள் விடயங்களில் 11.2 கிலோ கிராம் பற்றாக்குறையும், 05 விடயங்களில் 7.57 கிலோகிராம் மிகையொன்றும் நிலவியது.

(இ) மஹர சிறைச்சாலையில் 2010, 2011 மற்றும் 2012 ஆகிய வருடங்களுக்காக ரூபா 5,360,468 கூட்டுத்தொகையான சிறைச்சாலைப் படிகள் சிறைக்கைதிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வீரவில மற்றும் தல்தென சிறைச்சாலைகளில் 2015 ஒக்தோபர் மாதம் வரையிலும் சிறைக்கைதிகளுக்கான சிறைச்சாலைப் படிகள் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற தன்மை உடையனவாக காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(அ) பயிற்சியொன்றினை வழங்காது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 1,000,000 தொகையும் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,100,000 தொகையுமாக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், வருடமொன்றுக்கு 100 உபகரணங்கள் வீதம் 300 தீயணைக்கும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த உபகரணங்களுக்காக இரண்டு வருட உத்தவாதக்காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், எந்த உபகரணமும் குறித்த காலப்பகுதியினுள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு பழுதுபார்த்தல்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட 200 உபகரணங்களை ரூபா 649,483 தொகைப் பணத்திற்கு மீள நிரப்பப்பட்டு பாவனைக்கு எடுக்கக்கூடியதாக

இருந்த போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. தீயணைக்கும் கருவிகளை பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டிராததுடன், இக்டாட் வழிகாட்டி தீ நிவாரணம் தொடர்பான விரிவுரையொன்று தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் நடைமுறைகளிலிருந்து விலகுதல்**

ஆண்டின் இறுதியிலான பெறுகைகளைத் திட்டமிடல் மற்றும் பெறுகைகள் நடைமுறையிலான நலிவுகளின் காரணமாக சொத்துக்களை கையேற்பதற்காக 02 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 194,000,000 தொகையான நிதியேற்பாடுகளில் 53 சதவீதம் அல்லது ரூபா 102,390,324 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 32,000,000 மதிப்பிடப்பட்ட கிரயம் கொண்ட மாத்தறை கொட்டுவிலவத்த சிறைக்கைதிகளுக்கான பயிற்சிப் பாடசாலையினை நிர்மாணிப்பதற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 15,958,902 செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சிறைக்கைதிகளின் படிகளிலிருந்து 10 சதவீதம் படி ஈடுபடுத்தி சிறைச்சாலைகள் வெகுமதி நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 381 (1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வங்கிக் கணக்கினை ஆரம்பிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த நிதியத்திலிருந்து 2001 – 2005 காலப்பகுதியினுள் ஒரு சேமிப்பு கணக்கொன்றும் 02 நிலையான வைப்புக் கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளப்பெறுதல்கள் எவையும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகள் முறையே ரூபா 5,113,063 தொகை, ரூபா 500,000 மற்றும் ரூபா 700,000 ஆக இருந்தது.

## 3.13 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2011 செப்தம்பர் 23 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி ரூபா 400,000 தொகையான நட்டமேற்பட்டிருந்த வாகனத்திற்கு நேர்ந்த அவசர விபத்து தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வாகனம் முழுமையாக

சேதத்திற்குள்ளாகி பாவனைக்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. விபத்துக்குள்ளாகியிருந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தை செலுத்திய மேலதிக அதிகாரியிடமிருந்து 2016 ஏப்ரல் 03 ஆந் திகதி ரூபா 400,000 தொகையான நட்டம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மிட்சுபிஸி லேன்சர் வாகனமொன்று 2013 ஏப்ரல் 11 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 400,000 மதீப்பீடொன்றின் அடிப்படையில் தனியார் கராஜ் ஒன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2015 நவம்பர் 20 ஆந் திகதியளவில் அந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும், காப்புறுதி நிறுவனத்தால் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்த ரூபா 68,750 தொகையினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2015 யூலை 30 ஆந் திகதி பழுதுபார்த்தல்களை விரைவாக மேற்கொள்ளுமாறு இந்திக ஒட்டோ கராஜிற்கு கடிதமொன்றின் மூலம் அறிவித்திருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரையிலும் குறித்த வாகனம் காரஜில் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 3.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

2002 ஆம் ஆண்டின் போது வெலிக்கடை சிறைச்சாலையில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அகற்றப்பட்ட மின் பிறப்பாக்கி இயந்திரம் வீரவில சிறைச்சாலைக்கு வழங்கப்பட்டதன் பின்னர் ரூபா 510,502 செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்தது. மின்சாரக் கட்டமைப்பினை தாபிப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 6.1 மில்லியன் கொலன்னாவ மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த மின் பிறப்பாக்கி இயந்திரத்தை 2014 ஆம் ஆண்டின் போது கைதவிர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. புதியதொரு மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை வழங்குவதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் மின்சார கட்டமைப்பினை தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 61 இலட்சம் செலவினம் சிக்கனமற்றதாக காணப்பட்டது.

## 3.15 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிறைச்சாலை நிறுவனங்களில் சிறைக்கைதிகளின் புகைப்படங்களை பெற்று சிறைப் பதிவினை முறைப்படி மேற்கொள்ளல் மற்றும் தப்பிச்செல்லும் போது அந்த புகைப்படங்களை பொலிஸ் மற்றும் ஊடகங்களுக்கு வழங்கவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. 32 டிஜிட்டல் கெமராக்கள் ரூபா 464,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 செப்தம்பர் 25 ஆந் திகதியளவில் 28 சிறைச்சாலை நிறுவனங்களில் 93 சிறைக்கைதிகள் தப்பிச்சென்றிருந்த போதிலும் அவர்களின் புகைப்படத்தை பொலிஸ் மற்றும் ஊடகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 – 2014 காலப்பகுதியினுள் மஹர சிறைச்சாலையில் மரணமடைந்த 46 சிறைக்கைதிகள் தொடர்பில் மரண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், விசாரணை அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் கோவைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் 2015 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கட்டிடங்களுக்கு தேவையான கதவு ஜன்னல்களை பொருத்துவதற்காக 2015 யூலை 21 ஆந் திகதி ரூபா 248,487 செலுத்தப்பட்டிருந்தது. 2015 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு இயந்திரங்கள் பொருத்தப்படாமையால் நபர்கள் மற்றும் பொதிகளை பரிசோதனை செய்யும் இயந்திரம் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஈ) மஹர சிறைச்சாலைக்கு சொந்தமான சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட 9 உத்தியோகபூர்வ இல்லங்களை பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒடெக்ஸ் மின் பிறப்பாக்கி இயந்திரம் தல்தென சிறைச்சாலையின் தச்சுப் பிரிவின் அருகில் பாவனைக்கு எடுக்கப்படாமல் காணப்பட்டது.

(ஊ) 2012 ஆம் ஆண்டு முதல் 2014 செப்தம்பர் 10 ஆந் திகதி வரை தல்தென சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற கைதிகளில் 07 பேரை 2015 நவம்பர் மாதம் வரையிலும் கண்டுபிடிக்க முடியாது போயிருந்தது.

(எ) தல்தென சிறைச்சாலையின் தச்சுப்பிரிவு மற்றும் ஒட்டுதல் பிரிவினுள் சிறைக்கைதிகளின் செயற்பாடுகள் தொடர்பில் பணியாற்றுவதற்கு நிர்வாகியொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தல்தென கைத்தொழில் பிரிவு மற்றும் கமநல உற்பத்திகள் வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த உற்பத்திகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 196,231 பெறுமதியான 07 காசோலைகள் 2016 செப்தம்பர் மாதம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.16 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 95 | 48 | 47 |
| (ii) | மூன்றாம் நிலை | 6,864 | 5,341 | 1,521 |
| (iii) | இரண்டாம் நிலை | 494 | 297 | 197 |
| (iv) | ஆரம்ப நிலை | 369 | 331 | 36 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த/ அடிப்படை) | - | 04 | - |
| | **மொத்தம்** | **7,822** | **6,021** | **1,801** |

மேற்படி வெற்றிடங்கள் நிலவியமையால் சிறைச்சாலை நிறுவனங்களில் கடமைகளை நிறைவேற்றும் போது பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(அ) தல்தென சிறைச்சாலையில் 2015 செப்தம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறான உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 63 ஆக இருந்ததுடன், அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாத காரணத்தால் விவசாய, தச்சு மற்றும் பொருத்துதல் பிரிவுகளின் நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) விசாலமான பரப்பளவினைக் கொண்ட பல்லேகெல சிறைச்சாலையை சுற்றிலும் பாதுகாப்பிற்காக மதிற் சுவரொன்றோ அல்லது வேலிகளோ நிர்மாணிக்கப்பட்டிராததுடன், 28 பாதுகாப்பு காவலரண்கள் தாபிக்கப்பட்டிருந்தன. காவலரண்களுக்கு தேவையான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் சிறைச்சாலையில் காணப்படவில்லை.

(இ) அதிகளவிலான நீதிமன்றங்களை உள்ளடக்கும் சிறைக்கைதிகளை கொண்ட சிறைச்சாலையொன்றான தங்கல்ல சிறைச்சாலையின் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையால் நீதிமன்றத்திற்கு சிறைக்கைதிகளை கொண்டு செல்லும் போது சிக்கலான நிலைமையொன்றிற்கு முகங்கொடுக்க நேர்வதாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) பதுள்ளை சிறைச்சாலைக்கு பதுள்ளை மற்றும் நுவரெலிய நீதிமன்ற வலயங்களின் சுமார் 10 நீதிமன்றங்களில் கடமைகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன், உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை அதிகளவில் நிலவியமையால் சிறைச்சாலைகளின் நிறுவக மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் குறைபாடுகள் நிலவியதுடன் நடாத்திச் செல்வதில் பல அசௌகரியங்களும் காணப்பட்டன.